முருகப்பெருமான் துணை

**மகான் வேதாந்தச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**13.11.2021**, சனிக்கிழமை

1. ஞான சபை கொண்ட அரங்கா
ஞானிகளை கலியிலும் உருவாக்கிட
ஞானமாக வந்த தேசிகா
ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே பிலவ துலை திங்கள்
குறைவிலா இருபானேழ்திகதி காரிவாரம்
(பிலவ வருடம் ஐப்பசி மாதம் 27ம் நாள், 13.11.2021 சனிக்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசிதனை
தேசிகனுக்கு வேதாந்தச்சித்தர் யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
உண்மை நெறி உரைத்து
ஞானவான்களை தேர்வு செய்யும்
ஞானி அரங்கன் மார்க்கமே கலியில்
4. கலியில் சிறந்த மார்க்கமாகும்
கண்டுத் தேறி உலக மக்கள்
பழிபாவச் செயலில் செல்லா
பக்குவம் தரும் ஜீவதயவு நெறிவழி வருக
5. வருகவே துன்ப கதிகளெல்லாம்
வந்தச் சுவடு தெரியா விலகி
தரும ஞான வழிகள் சார்ந்து
தரணியோர் கடைபிடித்து வர
6. வருகவே நிலைமைகள் யாவும் மாறி
வளர்ச்சிப் பாதைகள் ஆகி
தருகின்ற தயவு குணம் பெருகி
தரணியில் மாற்றம் காண்கும்
7. காண்கவே கந்தவேலன் சக்தியான
கருணை மிக்க அரங்கனின்
நன்மைதரும் கரம்பட தீட்சை
ஞான தீட்சையாக ஏற்றுவர
8. வருகவே கலியுகம் தன்னில்
வடிவேலனாரின் ஆசி பலம்
தருமபலம் யாவும் இணைந்து
தரணியே பாதுகாப்பை பெறும்
9. காப்பான தரும ஞான வேலி
கந்தனே அரங்கன் வழி போட்டதால்
ஒப்பு கொண்டு வருபவரெல்லாம்
ஓங்கார ஞான சூட்சுமம் விளங்கி

10. விளங்கியே ஞானிகள் ஆகின்ற
வினை போக்கும் சக்தி பலமும்
கலங்கமிலா தெய்வபலமும் அடைவர்
கருணையே வடிவாக அருளும் தவசி

11. தவசியரின் நாம செப பலமே
தரும பலமாக ஞானபலமாக
அவனியில் எங்கும் நிரம்பியே
அற்புதம் அடைந்திடக் கூடும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–